## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – (2012/2013 Batch) 2015/2016 (யூன் 2018)

# PSS 4133 Foreign Policy of Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து ஏதாவது இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

## பகுதி – I

01. (அ) வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன? வரைவிலக் கணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

02. (அ) இலங்கையின் வெளியுறவுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான பண்புகள் யாவை?

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் டி.எஸ்.செனநாயக்கா முதன்மைப்படுத்திய விடயங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

03. (அ) ஐக்கிய தேசியக் கட்சியின் வெளியுறவுக் கொள்கையின் பண்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெளியுறவுக் கொள்கையின் பண்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

# பகுதி – II

04. (அ)"1977ஆம் ஆண்டிற்கும் 1990 ஆம் ஆண்டிற்கும் இடையிலான இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இந்தியாவின் தேசியநலன், தேசிய பாதுகாப்பிற்கு பாதகமானதாக அமைந்தது." இக்கூற்றினைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

(ஆ)"சிறிய நாடு ஒன்றும் பெரிய நாடு ஒன்றும் சிறப்பான இராஜதந்திர உறவினைப் பேண முடியும் என்பதற்கு சீனா-இலங்கை இராஜதந்திர உறவு சிறப்பானதொரு முன்னுதாரணமாகும்." பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

05. சார்க் நாடுகளுடன் இலங்கை பேணிவரும் வெளியுறவுக்கொள்கை இலங்கையின் தேசிய நலன்களுக்கு எந்தளவிற்குச் சாதகமானது என்பதைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

06. வெளியுறவுக் கொள்கையில் "அணிகோனம்" என்ற எண்ணக்கரு சமகால சர்வதேச அரசியல் சூழலுக்கு எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதை இலங்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

*****